Completing Absentee Notes and Notices

# பாடசாலைக்கு வராத மாணவர் பற்றிய குறிப்புகள் மற்றும் அறிவிப்புகளை நிரப்புதல்

பெற்றோர் மற்றும் கவனிப்பாளருக்கான தகவல்கள்

## உங்கள் பிள்ளை பள்ளிக்கு வரமுடியாத நிலை ஏற்படும் போது இதை நீங்கள் பள்ளிக்குத் தெரிவிக்க வேண்டியதும் வராமைக்கான காரணத்தைக் காட்ட வேண்டியதும் அவசியமாகும்.

மாணவர் பாடசாலை வருகைப் பதிவேடுகளை மிகச் சரியான முறையில் வைத்திருக்க வேண்டிய சட்டப்படியான பொறுப்பு பள்ளி முதல்வர்களுக்கு உண்டு.

மாணவர் பாடசாலைக்கு வராமல் இருந்ததற்கான காரணம் ஏற்றுக்கொள்ளத் தக்கதுதானா என்பதை முடிவு செய்யும் பொறுப்பும் பள்ளி முதல்வர்களுக்கு உண்டு.

பிள்ளைகள் பாடசாலைக்கு வராமல் இருந்தால், இதற்கான காரணத்தை முடிந்தவரையிலும் பிள்ளைகள் பாடசாலைக்கு வராமல் இருப்பதற்கும் முன்பாகவே தெரிவிக்குமாறு பெற்றோர்களும் கவனிப்பாளர்களும் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

தமது பிள்ளைகளின் வராமை (absence) க்கென அனுமதி வேண்டும் பெற்றோர்களது வேண்டுகோள்களைப் பற்றி கேள்வி கேட்கும் உரிமை பள்ளி முதல்வர்களுக்கு உண்டு. குழந்தையின் வராமைக்கென காட்டப்படும் காரணம் குறித்த கேள்விகள் கேட்கும் உரிமையும் பாடசாலை முதல்வருக்கு உண்டு.

வராமைக்கான காரணத்தைத் தெரிவிக்க வேண்டி பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் கீழ்வருவனற்றைச் செய்யலாம்:

- குறிப்பு, தொலைநகல் (fax) அல்லது மின்னஞ்சல் ஒன்றினைப் பள்ளிக்கு அனுப்பலாம்
- பள்ளியைத் தொலைபேசியில் அழையுங்கள், அல்லது
- பள்ளிக்கு வருகை தாருங்கள்.

### பாடசாலைக்கு வராதிருந்த மாணவருக்கான இருமொழிக் குறிப்புகள் (bilingual absentee notes)

பாடசாலைக்கு வராதிருந்த மாணவருக்கான மூன்று இருமொழிக் குறிப்புகள் உள்ளன.

Absentee note 1 (வராதிருந்த மாணவருக்கான குறிப்பு 1) ஒரு முழு நாளும் மாணவர் வராதிருக்கும் போது இது பயன்படுத்தப்பட வேண்டும்.

Absentee note 2 (வராதிருந்த மாணவருக்கான குறிப்பு 2) ஒரு நாளுக்கும் மேற்பட்டு மாணவர் வராதிருக்கும் போது இது பயன்படுத்தப்பட வேண்டும்.

Absentee note 3 (வராதிருந்த மாணவருக்கான குறிப்பு 3) பகுதி நாளு (part of the day) க்கு மாணவர் வராதிருக்கும் போது இது பயன்படுத்தப்பட வேண்டும்.

### பாடசாலைக்கு வராதிருந்த மாணவர் குறித்த அறிவிப்புகள்

குழந்தையின் வராமைக்கான காரணம் பெறப்பட்டிருக்காத போது Absentee Notice (பாடசாலைக்கு வராதிருந்த மாணவர் குறித்த அறிவிப்பு) ஒன்றைப் பாடசாலையினர் உங்களுக்கு அனுப்பலாம்.

காரணம் காட்டப்படாத வராமை நிகழ்ந்த இரண்டு நாட்களுக்குள்ளாக பெற்றோர்களுடன் தொடர்பு கொள்ளும் பொருட்டு பாடசாலை முதல்வர்கள் Absentee Notice - ஐப் பயன்படுத்துவர். வராமைக்கான காரணத்தைக் காண்பித்து Absentee Notice – ஐ ஆங்கிலத்தில் நிரப்பி ஏழு பாடசாலை நாட்களுக்குள்ளாக இதைப் பள்ளிக்குத் திருப்பி அனுப்ப வேண்டும்.

### வராமைகள் குறித்த விவரங்களை நிரப்புதல்

உங்கள் பிள்ளையின் வராமை அல்லது பகுதி நேர வராமை குறித்த விவரங்களை அளிக்குமாறு 'பாடசாலைக்கு வராத மாணவர் பற்றிய குறிப்புகள்' (Absentee Notes) மற்றும் 'பாடசாலைக்கு வராத மாணவர் குறித்த அறிவிப்புகள்' (Absentee Notice) ஆகியவை வேண்டுகின்றன.

அளிக்கப்படும் காரணங்கள் பாடசாலைக்குப் புரிய வேண்டும் என்பதற்காக இப் பகுதிகள் ஆங்கிலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இருக்கக்கூடிய காரணங்கள் இத் தகவலேட்டில் தரப்பட்டுள்ளன. மற்றும், பொருத்தமான தருணங்களில் படிவத்தில் நீங்கள் பார்த்து எழுதுவதற்காக இவை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

'பாடசாலைக்கு வராத மாணவர் பற்றிய குறிப்புகள்' (Absentee Notes) மற்றும் 'பாடசாலைக்கு வராத மாணவர் குறித்த அறிவிப்புகள்' (Absentee Notices) ஆகியவற்றைப் புரிந்து கொள்வதிலோ அல்லது படிவத்தினை நிரப்புவதிலோ உங்களுக்குக் கஷ்டம் இருந்தால் தொலைபேசி மூலம் பள்ளியை அழைத்து உங்கள் பிள்ளையின் வராமைக்கான காரணத்தை நீங்கள் தெரிவிக்கலாம். பாடசாலையை தொலைபேசியில் அழைத்தால், நீங்கள் எழுத்து மூலமான குறிப்பினை நிரப்ப வேண்டியதில்லை.

### தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவை

உங்கள் பிள்ளையின் பாடசாலையுடன் தொடர்பு கொள்ள உரைபெயர்ப்பாளர் உதவி தேவைப்பட்டால், 131 450 எனும் எண் மூலம் தயவு செய்து தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவை (Telephone Interpreter Service) யை அழைத்து உங்களது மொழியில் உரைபெயர்ப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். உரைபெயர்ப்பாளர் பள்ளியுடன் தொடர்பு கொண்டு உரையாடலில் உங்களுக்கு உதவும் பொருட்டு இணைப்பில் காத்திருப்பார். இச் சேவைக்கென உங்களிடமிருந்து கட்டணம் அரவிடப்படமாட்டாது.

All content copyright
NSW Department of Education

## வராமைக்கான இயலக்கூடிய ககாரணங்கள்

## Possible reasons for absence

### மருத்துவக் காரணம்

### Medical reason:

| | |
|---|---|
| சளிக்காய்ச்சல் | Flu |
| வயிற்று வலி | Stomach-ache |
| வயிற்றுப் போக்கு | Diarrhoea |
| தடுமன், சளி | Cold |
| தலைவலி | Headache/Migraine |
| கடுமையான வலி | Strong pain |
| காய்ச்சல் | Fever |
| எலும்பு முறிவு | Broken bone |
| வாந்தி | Vomiting |
| சிற்றம்மை போன்ற தொற்று நோய்கள் | Infectious illness eg chicken pox |
| மூக்கில் இரத்தக் கசிவு | Nose bleed |
| ஆஸ்த்துமா | Asthma |
| கொப்புளங்கள் (rash) | Rash |
| காயம் | Injury |
| மருத்துவருடன் சந்திப்புவேளை | Medical appointment |
| பல் மருத்துவருடன் சந்திப்புவேளை | Dental appointment |
| கண் கண்ணாடி செய்பவரைப் பார்க்கப் போதல் | Optometry appointment |
| இயன்மருத்துவருடன் சந்திப்பு வேளை | Physiotherapy appointment |
| சிறப்பு மருத்துவருடன் சந்திப்புவேளை | Specialist appointment |
| இதர காரணம் - தொலைபேசி மூலம் பள்ளிக்குத் தெரிவிப்பேன். | Other - I will telephone the school to explain |

### குடும்பக் காரணம்

### Family reason:

| | |
|---|---|
| இறுதிச் சடங்கு | Funeral |
| வீடு மாறல் | Moving residence |
| வெளிநாட்டில் உள்ள நெருங்கிய உறவினர் ஒருவரது வருகை அல்லது புறப்பாடு | Arrival or departure of an immediate relative from overseas |
| முக்கியமான குடும்ப நிகழ்வு ஒன்றில் தவிர்க்க இயலாத ஈடுபாடு | Unavoidable involvement in a serious family incident |
| இதர காரணம் - தொலைபேசி மூலம் பள்ளிக்குத் தெரிவிப்பேன். | Other - I will telephone the school to explain |

### இதர காரணம்:

### Other reason:

| | |
|---|---|
| துரதிருஷ்டமான அல்லது எதிர்பாராத நிகழ்வுகள்: உதாரணமாக, தீ விபத்து அல்லது வெள்ளப் பெருக்கு | Misadventure and unforeseen events eg fire, flood |
| சிறப்பு நிகழ்ச்சி ஒன்றில் பங்கு பெறல்: உதாரணமாக, சமயச் சடங்கு ஒன்றிற்குச் செல்லல் | Participation in special event, eg attendance at a religious ceremony |
| குடும்ப விடுமுறை | Family holiday |
| போக்குவரத்து வசதியில் கஷ்டம் | Transport difficulty |
| தவிர்க்க இயலாத காலத் தாழ்வு | Unavoidable delay |
| இதர காரணம் - தொலைபேசி மூலம் பள்ளிக்குத் தெரிவிப்பேன். | Other - I will telephone the school to explain |